## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

## O.S.No. 11/2019

வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி : வா.சா.1

பெயர் : துரைராஜ்

தகப்பனார் பெயர் : லட்சுமணன்

தொழில் :

கிராமம் :

தாலுகா :

2025ஆம் ஆண்டு ஜீலை மாதம் 08ம் நாள் செவ்வாய் கிழமை 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்ச் கிளார்க் திரு.மாஆ.மணியரசன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமாக நிருபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

1. வாரிசு விபரங்களை காட்டக்கூடிய வாரிசு வழி ஜாபிதா அசல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 18.12.1997ம் தேதிய 1ம் பிரதிவாதியின் பெயரில் கடந்த 18.12.1997-ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், சண்முகநாதபுரம் மேற்கு 1-வது வீதி, க.எண்.2-49, என்ற முகவரியை சேர்ந்த அருணாச்சலம் செட்டியார் மகன் வீரப்ப செட்டியார் மற்றும் சிதம்பரம் செட்டியார் ஆகியோர்களிடம் எனது தாயாரும், 1ம் பிரதிவாதியான சொர்ணம் அம்மாள் பேரில் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு ஆவண எண்.1848-1997-ல் கிரையம் வாங்கப்பட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. நாளிதழ் விளம்பரம் அசல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. ஆவண 123 of 2019-ல் 1ம் பிரதிவாதி 6, 7 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கொடுத்த பதிவு கிரைய சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 19.02.2019ம் தேதிய வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (3) அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 6, 7 பிரதிவாதிகள் பொய்யான பதில் அறிவிப்பை அனுப்பியதற்கான பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. மேற்படி பதில் அறிவிப்பிற்கு வாதி அனுப்பிய கூடுதல் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. மேற்படி வாதி அனுப்பிய அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சர்வீஸ் ஆகாமல் திரும்பி வந்த கவர்கள் (3) அசல் **வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(1, 2, 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)**